<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கோயம்புத்தூர்.</u>

முன்னிலை : திரு.K.சிவக்குமார், எம்.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர்,
கோயம்புத்தூர்.

2026ம் ஆண்டு ஜுலை மாதம் 28ம் நாள் செவ்வாய்கிழமை

<u>Crl.M.P.No. 33895 / 2023</u>

<u>in</u>

<u>C.C.No. 2541 / 2022</u>

1. S.துரைராஜ் (வயது 70),
   த/பெ.சுபாரையா.

2. D.மல்லிகா (வயது 64),
   க/பெ.S.துரைராஜ்

3. D.சாலை சிவபிரகாசம் (வயது 40),
   த/பெ.S.துரைராஜ் ... மனுதாரர்கள் / எதிரிகள் 2 முதல் 4

– இடையே –

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
மத்திய குற்ற புலனாய்வு துறை, EOB,
சென்னை ... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / 2 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.பத்மநாபன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர்

திரு.V,சுரேந்திர மோகன், அரசு தரப்பு சிறப்பு வழக்குரைஞர் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

இந்த குற்ற வழக்கிலிருந்து 2 முதல் 4 எதிரிகளை விடுவிக்க வேண்டி குவிமுச பிரிவு 239ன் கீழ் மனு.

1. மனுவின் சுருக்கம் :

எதிர்மனுதாரர் / புகார்தாரர், மனுதாரர்கள் மீது இதச பிரிவு 120(B) r/w 420 மற்றும் 409 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 13(2) r/w 13(1)(d)ன் கீழ் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மனுதாரர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் இல்லை என்றும், முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றப்பத்திரியில் நியாயமான காரணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுதாரர்களுக்கு குற்ற செயலில் ஈடுபடும் உள்நோக்கம் ஏதும் இல்லை என்றும், எதிரிகள் மீது முதல் தோற்ற வழக்கு இருப்பதாக கருதுவதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை என்றும், 1ம் எதிரி நிறுவனத்தின் பெயரில் கடன் வழங்கப்பட்டிருந்ததாகவும், எனவே குற்ற சதி அல்லது ஊழல் தடுப்பு சட்டத்தின் விதிகளை இதற்கு பயன்படுத்துவதற்கு எந்தவொரு முகாந்திரமும் இல்லை என்றும், 1ம் எதிரியின் கணக்கு 31.07.2005ல் வாராக் கடனாக அறிவிக்கப்பட்டது என்றும், ஆனால் 2009 வரை இது குறித்து 1ம் மனுதாரருக்கோ அல்லது மற்ற மனுதாரர்களுக்கோ தெரிவிக்கப்படவில்லை. Sarfaesi சட்டத்தின் கீழ் 1ம் மனுதாரருக்கு எதிராக 2017ம் ஆண்டில் கடன் மீட்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது என்றும், IBC

சட்டத்தின் கீழ் 2019ம் 1ம் மனுதாரருக்கு எதிராக நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது என்றும், இந்த இரு நடவடிக்கையின் போதும் மனுதாரர்கள் மீது மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவில்லை என்றும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் TANGEDCO போன்ற சில மத்திய மற்றும் மாநில அமைப்புகளிடமிருந்து உரிய ஒப்புதல் கிடைக்காத காரணத்தினாலேயே மனுதாரின் தொழில் முடிங்கியது என்றும், இயந்திரங்கள் வாங்கப்பட்டதும், மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு TANGEDCOன் மின் கட்டமைப்பில் செலுத்தப்பட்டதும், மேலும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்ட நிலுவை தொகை TANGEDCO–விடமிருந்து 1ம் எதிரி நிறுவனத்திற்கு வர வேண்டியிருந்ததும் ஆகிய உண்மைகள் முதல் தகவல் அறிக்கை (FIR) மற்றும் இறுதி அறிக்கையில் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றும், 2016ம் ஆண்டு முதல் 1ம் எதிரி நிறுவனத்தின் நடைமுறை கணக்கை இயக்க IOB வங்கி அனுமதிக்கவில்லை என்பதையும், 1ம் எதிரி நிறுவனம் கரூர் வைஸ்யா வங்கி நடப்பு கணக்கை இயக்க தொடங்கியதே புகார்தாரருக்கு தெரிந்தது என்பதையும் இறுதி அறிக்கையில் வெளிப்படுத்தவில்லை என்றும், சட்டவிரோதமாக முடக்கப்பட்ட IOB வங்கியின் கணக்கை மீண்டும் இயக்க அனுமதிக்குமாறு கோரி, 1ம் எதிரி நிறுவனம் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் Writ petition ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது என்றும், செலுத்த வேண்டிய TDS நிலுவைத் தொகை காரணமாக வருமான வரித் துறையால் அந்தக் கணக்கும் இணைக்கப்பட்டு முடக்கப்பட்டிருந்ததால், 1ம் எதிரி நிறுவனம் தனது கடனாளிகளிடமிருந்து வர வேண்டிய தொகையை 2ம் மனுதாரரின் பெயரிலுள்ள கணக்கின் வாயிலாகப் பெற வேண்டிய கட்டாயத்திற்குள்ளானது என்றும், மேலும், அந்நிறுவனத்தைத் தொடர்ந்து இயங்க வைப்பதற்காக, ஊழியர்களின் ஊதியம் மற்றும் அன்றாடச் செலவுகளைச் சமாளிக்கவே அந்தத் தொகை பயன்படுத்தப்பட்டது என்றும், மேற்படி 1ம் எதிரி நிறுவனம் தாக்கல் செய்திருந்த Writ petition நிலுவையில்

இருந்ததையும், அந்நிறுவனம் CIRPக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அது மனு நடவடிக்கை முடிவுக்கு வந்தது என்றும், 1ம் எதிரி நிறுவனமானது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படும் வரை நிதியாண்டிற்கான அறிக்கைகளை தயாரித்து தாக்கல் செய்து வந்துள்ளது என்றும், இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களுக்கு நிதியுதவி அளித்த HDFC வங்கி, கடன் கணக்கில் நிலுவையிலுள்ள மிதி தொகையை உடனடியாக செலுத்த வேண்டுமென்றும், இல்லையென்றால் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலத்தில் விற்கப்படும் என்று கூறி 1ம் மனுதாரரை மிரட்டியது என்றும், வாகன கடன்களை செலுத்தியதை ஒரு குற்ற செயலாக கருத முடியாது என்றும், மனுதாரர்கள் மீது குற்ற சதி திட்டம் தீட்டியதாக குற்றச்சாட்டு இருந்த போதும், கடன் வழங்கிய வங்கி அதிகாரிகள் எவரும் குற்றவாளிகளாக சேர்க்கப்படவில்லை என்றும், ஆகவே இது கடன் பரிவர்த்தனைகள் உண்மையானவை என்றும், மனுதாரர்கள் தரப்பில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றும், மனுதாரர்கள் கடன் தொகையை தவறாக பயன்படுத்தியதற்கு எந்தவொரு ஆதாரமோ அல்லது சாட்சிகளின் வாக்குமூலமோ இல்லை என்றும், மனுதாரர்களுக்கும், 6ம் எதிரிக்கும் இடையே குற்றவியல் சதி இருந்ததை நிரூபிக்க எந்தவொரு ஆதாரமும் இல்லை என்றும், எனவே மனுதாரர்கள் / 2 முதல் 4 எதிரிகளை இந்த குற்ற வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதாகும்.

<u>2. எதிருரையின் சுருக்கம் :</u>

மனு பொய்யானது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு ரூ.62.2 கோடி அளவிற்கு இழப்பை ஏற்பத்தியதாக 20.11.2021 அன்று திருமதி.விஜயா, தலைமை மண்டல மேலாளர் அளித்த புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது இதச பிரிவு 120B r/w 420 & 409 மற்றும் Sec.13(2) r/w 13(1)(d) of PC Act, 1988ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், மனுதாரர்கள் கூடுதல் கடன் வசதிகளை

பெறுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளரான 6ம் எதிரி கூட்டு சேர்ந்து 2014ம் ஆண்டிற்கான மிதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து வங்கியிடம் அளித்ததாகவும், இதனால் அந்த கடன் மோசடியானது என அறிவிக்கப்பட்டது என்றும், இதனால் வங்கி சுமார் ரூ.13.36 கோடி அளவிற்கு பண இழப்பை சந்தித்தது என்றும், வழக்கின் விசாரணையின் போது சேகரிக்கப்பட்ட ஆவண சான்றுகள், மனுதாரர்கள் மற்றும் மற்ற எதிரிகளும் இணைந்து குற்றசதியில் ஈடுபட்டதையும், ஏமாற்றுதல் மற்றும் நம்பிக்கை துரோகம் ஆகிய குற்றங்களை செய்துள்ளதையும் மிக தெளிவாக காட்டுகிறது என்றும், 2019ம் ஆண்டில் 1ம் எதிரியின் கடன் கணக்கில் மோசடி நடந்திருப்பதை வங்கி RBIயிடம் 12.12.2019ல் தெரிவித்ததாகவும், பின் CBIயிடம் புகாரளித்ததாகவும், Sarfaesi மற்றும் IBC சட்டங்களின் கீழ் நடைபெறும் நடவடிக்கைகளுக்கும், சிபிஐ மேற்கொண்ட விசாரணைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், கடன் பெறுவதற்கான எதிரிகள் கொடுத்த அடைமான சொத்தை மதிப்பீட்டாளரான 6ம் எதிரி 8.5 லட்சம் மதிப்புடைய சொத்தை 45 லட்சமாக ஏறத்தாழ 6 மடங்கு அதிகப்படுத்தி காட்டி வங்கியிலிருந்து கூடுதலாக கடன் பெற்றுள்ளார்கள் என்றும், வேறு மதிப்பீட்டாளர்களை வைத்து மதிப்பீடு செய்து ஆராய்ந்து பார்த்த போது மேற்படி 6ம் எதிரியின் குற்ற சதி தெரிந்தது என்றும், வேறு மதிப்பீட்டார்களின் மதிப்பீடு அறிக்கை ஆவண எண்.129 முதல் 137 வரையாக குற்ற பத்திரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் தாங்கள் பெற்ற கடனை சுந்தரம் பைனான்ஸில் இருந்த தங்களுடைய சொந்த கடனை அடைக்க பயன்படுத்தியுள்ளார் என்றும், வங்கி விதிமுறை படி ஒரு காரணத்திற்காக வாங்கப்பட்ட கடனை வேறு ஒரு காரணத்திற்காக பயன்படுத்தக் கூடாது என்றும், எதிரிகள் வேறு காரணங்களுக்காக பயன்படுத்தியதை காட்டுவதற்காக ஆவண எண்கள் 229, 246, 247, 279, 280, 284, 286, 289, 291, 321, 322, 324 மற்றும் 325 ஆகிய ஆவணங்கள் குற்ற பத்திரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் எதிரிகள் மீதான குற்றங்களை

நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கில் Prima facie உள்ளது என்றும், வழக்கின் ஆரம்ப நிலையில் இந்த ஆவணங்களை பற்றி ஆராய முடியாது என்றும், இந்த மனு தள்ளுப்படிக்குரியது என்பதாகும்.

3. மனு அனுமதிக்கதக்கதா ?

எதிர்மனுதாரர் / புகார்தாரர், வங்கியில் மோசடியான ஆவணங்களை கொடுத்து கூடுதல் கடன் பெற்றார்கள் என்றும், பெற்ற கடனை வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தியுள்ளார்கள் என்றும், அதனால் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு ரூ.62.2 கோடி அளவிற்கு இழப்பை ஏற்பத்தியதாக வங்கி கொடுத்த புகாரின் அடிப்படையில் மனுதாரர்கள் மீது இதச பிரிவு 120(B) r/w 420 மற்றும் 409 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 13(2) r/w 13(1)(d)ன் கீழ் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மனுதாரர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் இல்லை என்றும், முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றப்பத்திரியில் நியாயமான காரணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுதாரர்களுக்கு குற்ற செயலில் ஈடுபடும் உள்நோக்கம் ஏதும் இல்லை என்றும், எதிரிகள் மீது முதல் தோற்ற வழக்கு இருப்பதாக கருதுவதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை என்றும், 1ம் எதிரி நிறுவனத்தின் பெயரில் கடன் வழங்கப்பட்டிருந்ததாகவும், எனவே குற்ற சதி அல்லது ஊழல் தடுப்பு சட்டத்தின் விதிகளை இதற்கு பயன்படுத்துவதற்கு எந்தவொரு முகாந்திரமும் இல்லை என்றும், 1ம் எதிரியின் கணக்கு 31.07.2005ல் வாராக் கடனாக அறிவிக்கப்பட்டது என்றும், ஆனால் 2009 வரை இது குறித்து 1ம் மனுதாரருக்கோ அல்லது மற்ற மனுதாரர்களுக்கோ தெரிவிக்கப்படவில்லை. Sarfaesi சட்டத்தின் கீழ் 1ம் மனுதாரருக்கு எதிராக 2017ம் ஆண்டில் கடன் மீட்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது என்றும், IBC சட்டத்தின் கீழ் 2019ம் 1ம் மனுதாரருக்கு எதிராக நடவடிக்கைகள்

தொடங்கப்பட்டது என்றும், இந்த இரு நடவடிக்கையின் போதும் மனுதாரர்கள் மீது மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவில்லை என்றும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் TANGEDCO போன்ற சில மத்திய மற்றும் மாநில அமைப்புகளிடமிருந்து உரிய ஒப்புதல் கிடைக்காத காரணத்தினாலேயே மனுதாரின் தொழில் முடிங்கியது என்றும், இயந்திரங்கள் வாங்கப்பட்டதும், மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு TANGEDCOன் மின் கட்டமைப்பில் செலுத்தப்பட்டதும், மேலும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்ட நிலுவை தொகை TANGEDCO–விடமிருந்து 1ம் எதிரி நிறுவனத்திற்கு வர வேண்டியிருந்ததும் ஆகிய உண்மைகள் முதல் தகவல் அறிக்கை (FIR) மற்றும் இறுதி அறிக்கையில் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றும், 2016ம் ஆண்டு முதல் 1ம் எதிரி நிறுவனத்தின் நடைமுறை கணக்கை இயக்க IOB வங்கி அனுமதிக்கவில்லை என்பதையும், 1ம் எதிரி நிறுவனம் கரூர் வைஸ்யா வங்கி நடப்பு கணக்கை இயக்க தொடங்கியதே புகார்தாரருக்கு தெரிந்தது என்பதையும் இறுதி அறிக்கையில் வெளிப்படுத்தவில்லை என்றும், சட்டவிரோதமாக முடக்கப்பட்ட IOB வங்கியின் கணக்கை மீண்டும் இயக்க அனுமதிக்குமாறு கோரி, 1ம் எதிரி நிறுவனம் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் Writ petition ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது என்றும், செலுத்த வேண்டிய TDS நிலுவைத் தொகை காரணமாக வருமான வரித் துறையால் அந்தக் கணக்கும் இணைக்கப்பட்டு முடக்கப்பட்டிருந்ததால், 1ம் எதிரி நிறுவனம் தனது கடனாளிகளிடமிருந்து வர வேண்டிய தொகையை 2ம் மனுதாரரின் பெயரிலுள்ள கணக்கின் வாயிலாகப் பெற வேண்டிய கட்டாயத்திற்குள்ளானது என்றும், மேலும், அந்நிறுவனத்தைத் தொடர்ந்து இயங்க வைப்பதற்காக, ஊழியர்களின் ஊதியம் மற்றும் அன்றாடச் செலவுகளைச் சமாளிக்கவே அந்தத் தொகை பயன்படுத்தப்பட்டது என்றும், மேற்படி 1ம் எதிரி நிறுவனம் தாக்கல் செய்திருந்த Writ petition நிலுவையில் இருந்ததையும், அந்நிறுவனம் CIRPக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அது மனு

நடவடிக்கை முடிவுக்கு வந்தது என்றும், 1ம் எதிரி நிறுவனமானது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படும் வரை நிதியாண்டிற்கான அறிக்கைகளை தயாரித்து தாக்கல் செய்து வந்துள்ளது என்றும், இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களுக்கு நிதியுதவி அளித்த HDFC வங்கி, கடன் கணக்கில் நிலுவையிலுள்ள மீதி தொகையை உடனடியாக செலுத்த வேண்டுமென்றும், இல்லையென்றால் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலத்தில் விற்கப்படும் என்று கூறி 1ம் மனுதாரரை மிரட்டியது என்றும், வாகன கடன்களை செலுத்தியதை ஒரு குற்ற செயலாக கருத முடியாது என்றும், எனவே 2 முதல் 4 எதிரிகளை மேற்படி குற்ற வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பது மனுதாரர்கள் தரப்பு வாதமாகும்.

4. எதிர்மனுதாரர் தரப்பு வாதம் என்னவென்றால், கோழி பண்ணை கழிவுகளிலிருந்து உயிர் மின்சாரம் எடுக்கும் தொழிலுக்காக கடன் பெறப்பட்டது என்றும், கடன் பெறுவதற்கான எதிரிகள் கொடுத்த அடைமான சொத்தை மதிப்பீட்டாளரான 6ம் எதிரி 8.5 லட்சம் மதிப்புடைய சொத்தை 45 லட்சமாக ஏறத்தாழ 6 மடங்கு அதிகப்படுத்தி காட்டி வங்கியிலிருந்து கூடுதலாக கடன் பெற்றுள்ளார்கள் என்றும், வேறு மதிப்பீட்டாளர்களை வைத்து மதிப்பீடு செய்து ஆராய்ந்து பார்த்த போது மேற்படி 6ம் எதிரியின் குற்ற சதி தெரிந்தது என்றும், வேறு மதிப்பீட்டார்களின் மதிப்பீடு அறிக்கை ஆவண எண்.129 முதல் 137 வரையாக குற்ற பத்திரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் தாங்கள் பெற்ற கடனை சுந்தரம் பைனான்ஸில் இருந்த தங்களுடைய சொந்த கடனை அடைக்க பயன்படுத்தியுள்ளார் என்றும், வங்கி விதிமுறை படி ஒரு காரணத்திற்காக வாங்கப்பட்ட கடனை வேறு ஒரு காரணத்திற்காக பயன்படுத்தக் கூடாது என்றும், எதிரிகள் வேறு காரணங்களுக்காக பயன்படுத்தியதை காட்டுவதற்காக ஆவண எண்கள் 229, 246, 247, 279, 280, 284, 286, 289, 291, 321, 322, 324 மற்றும் 325 ஆகிய ஆவணங்கள் குற்ற

பத்திரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் எதிரிகள் மீதான குற்றங்களை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கில் Prima facie உள்ளது என்றும், வழக்கின் ஆரம்ப நிலையில் இந்த ஆவணங்களை பற்றி ஆராய முடியாது என்றும், இந்த மனு தள்ளுபடிக்குரியது என்பதாகும்.

5. State of Orissa Vs Debendra Nath Padhi in Criminal Appeal No.497/2001, "would result in conducting a mini trial at the stage of framing of charge or taking cognizance. Such a course would not only be contrary to the object and the scheme of the Code but would also result in total wastage of the court time because of conducting of two trials, one at the stage of framing charge and the other after the charge is framed. It was contended that on true construction of Section 227 of the Code only the material sent by prosecution along with the record of the case and the documents sent along with it can be considered by the trial court at the time of framing of the charge. The accused at that stage has no right to place before the court any material" என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேற்படி முன் தீர்ப்பில் கூறியுள்ளது.

6. எதிர்மனுதாரர் / அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளுக்கு உண்டான ஆவணங்களாக உண்மை புகார்தாரரான வங்கியிடம் பெற்ற கடனை எதிரிகள் வேறு காரணங்களுக்காக பயன்படுத்தியதை காட்டுவதற்காக ஆவண எண்கள் 229, 246, 247, 279, 280, 284, 286, 289, 291, 321, 322, 324 மற்றும் 325 ஆகிய ஆவணங்கள் குற்ற பத்திரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று கடன் பெறுவதற்கு Securityக்காக கொடுக்கப்பட்ட அசையா சொத்தின் மதிப்பீட்டை 6ம் எதிரி ஏறத்தாழ 6 மடங்கு மதிப்பை உயர்த்தி காட்டியதற்கான ஆவணங்கள் 129 முதல் 137 வரையாக குற்ற பத்திரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே

அரசுத்தரப்பில் முதல் நிலை தோற்ற வழக்கு இருப்பதாக இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. State through Superintendent of Police vs. Nalini & Ors., reported in (1999) 5 SCC 253, என்ற மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை சுட்டிக்காட்டி அரசுத்தரப்பில் வாதிடப்பட்டது. மேற்படி தீர்ப்பில்

i. Conspiracy is when two or more persons agree to do or cause to be done an illegal act or legal act by illegal means.

ii. The offence of criminal conspiracy is an exception to the general law, where intent alone does not constitute crime. It is the intention to commit a crime and join hands with persons having the same intention.

iii. Conspiracy is hatched in private or in secrecy. It is rarely possible to establish a conspiracy by direct evidence. Usually, the existence of the conspiracy and its objects have to be inferred from the circumstances and the conduct of the accused.

iv. Where in pursuance of the agreement, the conspirators commit offences individually or adopt illegal means to do a legal act that has a nexus to the object of the conspiracy, all of them will be liable for such offences even if some of them have not actively participated in the commission of those offences.

அரசுத்தரப்பில் சுட்டிக்காட்டிய முன்தீர்ப்பின் படி குற்றமுறு சதி ரகசியமான முறையில் நடப்பதால் அதை நேரடியான சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க முடியாது என்று சூழ்நிலை கருத்தில் கொண்டே முடிவு செய்ய இயலும் என்றும், மேற்படி சதிகாரர்களில் சிலர் செயல்களில் தீவிரமாக ஈடுபடாவிட்டாலும், அவர்களும் மேற்படி குற்றத்திற்கு பொறுப்பாவார்கள் என கூறப்பட்டுள்ளது. எனவே எதிரிகள் அனைவர் மீதான குற்றமுறு சதி வழக்கின் இறுதி விசாரணையில் தான் அறிய முடியும்.

8. மனுவில் 2 முதல் 4 மனுதாரர்களின் கூறியுள்ள மற்ற சங்கதிகள் அனைத்தும் 2 முதல் 4 எதிரிகளின் கம்பெனியில் நடைபெற்ற சங்கதிகள் அவற்றிக்கும் இந்த மனுவிற்கும் சற்றும் பொருத்தமில்லை. அதேபோன்று மனுதாரர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட (1) Marimuthu Vs Palanigounder Eswaramoorthy in IA/902(CHE)/2023 in IA/304(CHE)/2022 in IBA/203/2020 (2) Palanigounder Eswaramoorthy Vs Subbaraya Ananthar Durairaju and 2 others in IA/249(CHE)/2022 in IBA/203/2020 (3) Vesa Holdings Private Limited and another Vs State of Kerala and others in (2015) 8 Supreme Court Cases 293 (4) Arshad Neyaz Khan Vs State of Jharkhand and another in 2025 SCC Online SC 2058 ஆகிய அனைத்து முன்தீர்ப்புகளும் வழக்கின் முழு விசாரணைக்கு பின்னிட்டு இறுதி வாதத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய முன்தீர்ப்புகளாகும்.

9. கோப்புகளை மட்டும் வைத்து முடிவு செய்ய முடியும் என்றால் சாட்சிகளை விசாரிக்கும் நடைமுறையே அர்த்தமற்றதாகிவிடும். மேலும் வழக்கின் ஆரம்ப கட்டத்திலேயே குற்றம் சாட்டப்பட்ட நபர்களில் ஒருவரையோ அல்லது பலரையோ விடுவித்துவிட்டால் வழக்கின் இறுதி விசாரணையில் விடுவிக்கப்பட்டவர்கள் குற்றம் புரிந்துள்ளார்கள் என தெரியவரும் போது வழக்கு விசாரணை வீணானதாகிவிடும் மற்றும் குற்றவாளி சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க ஏதுவாகிவிடும். குற்றம் இல்லாத நபர்கள் மீது குற்றம் சாட்டப்படும் நபர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்த நடைமுறையானது தவறாக பயன்படுத்தப்பட்டு நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதாக உள்ளது. இந்த மனுக்களை ஆராய்ந்து முடிவு செய்யும் நேரத்தில் வழக்கின் முழு விசாரணையையே முடித்துவிடலாம்.

10. எதிர்மனுதாரர் / புகார்தாரர் தரப்பில் புகாருடன் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் புகார்தாரர்

தரப்பு வழக்கில் முதல் தோற்ற வழக்கு (Prima facie case) இருப்பதாக இந்த நீதிமன்றம் முடிவு செய்வதாலும் முழு வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு தான் எந்தவொரு இறுதி முடிவிற்கும் வர முடியும்.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இந்த மனுவை இந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்ய முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சொல்லப்பட சுருக்கெழுத்தரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜுலை மாதம் 28ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

KUPPUSAMY SIVAKUMAR

Digitally signed by KUPPUSAMY SIVAKUMAR
Date: 2026.07.28 15:23:53 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
கோயம்புத்தூர்